Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 37/2024 PW-6**

Name : ஜோதி
Father / Husband name : சுப்ரமணி
Village : பண்ருட்டி
Age : 49
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 24.10.2025

Accused absent. Petition u/s 317 CrPC filed and allowed. Both side counsel present.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கடலூர் மாவட்டம் பண்ருட்டி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 2023 ம் ஆண்டு திண்டிவனம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். அப்போது ஒரு சில தினங்களில் திண்டிவனம் நகர காவல் நிலைய ஆய்வாளராக பொறுப்பு வகித்தேன். குறிப்பிட்ட தேதி நினைவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் திண்டிவனம் காவல் நிலைய குற்ற எண் 283/ 2023, U/s 279, 304(A) IPC சம்மந்தமாக நான் விசாரணை செய்யவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் நீதிமன்றத்திலுள்ள அசல் குற்ற இறுதி அறிக்கை, சாட்சிகள் ஜோதி, ஏழுமலை, பவானி, ராஜரத்தினம், மருத்துவர் சண்முகம், காவலர் வெங்கடேசன், உதவி ஆய்வாளர் தங்கம் ஆகியோர்களின் வாக்குமூலத்திலுள்ள கையொப்பங்கள், பிரேத விசாரணை அறிக்கை, ஆகியவற்றிலுள்ள கையொப்பங்கள் என்னுடையது அல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கு சம்மந்தமாக எந்த சாட்சியையும் நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

( **நீதிமன்ற குறிப்பு -** வழக்கின் புலன் விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர் ஜோதி, வழக்கு ஆவணத்திலுள்ள அனைத்து கையொப்பமும் அவருடையது இல்லை என அரசு தரப்பு சான்றாவணங்கு முரண்பாடாக சாட்சியம் அளித்துள்ளார். இது குறித்து விசாரிக்க ஆய்வாளரின் மாதிரி கையொப்பம் இன்று பெறப்படுகிறது. )

**Sd/ M.Elavarasi,**
**Judicial Magistrate No.I, Tindivanam**